அலைதாவும் கடலிலே விலையில்லா உயிரையே
ஆடியே கரைத்த எங்கள் மறவர்களே 2
தலைவனின் வழியிலே தணலென குருதியே
சாற்றினை சொரிந்த எங்கள் புயல்களே 2

அலைதாவும் கடலிலே விலையில்லா உயிரையே
ஆடியே கரைத்த எங்கள் மறவர்களே

பருத்திக் கடலில் பாய்ந்த புலிகள் பாடம் சொல்லின
உடல் வருத்தி உயிரில் தோய்ந்த தலைவன் ஆணை ஏற்றனர் 2
கருத்தில் கனவில் கண்ணில் தங்க ஈழம் வைத்தனர் 2
வெடி மருந்தில் உணர்வையூட்டி வீரர் வெற்றி பெற்றனர்

அலைதாவும் கடலிலே விலையில்லா உயிரையே
ஆடியே கரைத்த எங்கள் மறவர்களே

இதயம் நோக இடியை நெஞ்சில் சுமந்து சென்றனர்
எரி மலைகள்ஆகி எதிரி நெஞ்சில் தீயை சொரிந்தனர் 2
ஈரமான விழியில் வெப்பம் சுரந்து விம்மினர் 2
ஏவி நின்ற கடலின் மடியில் முகம் புதைத்தனர்

அலைதாவும் கடலிலே விலையில்லா உயிரையே
ஆடியே கரைத்த எங்கள் மறவர்களே

தாளம் பூவின் வாசம் முகர்ந்து புலிகள் நடந்தனர்
சூழும் மலையின் வாசல் நோக்கி புயல்கள் விரைந்தனர் 2
தேசம் வாழ வேண்டும் என்று இவர்கள் வாழ்ந்தனர் 2
தமிழ் ஈழம் வாழும் என்று புயல்கள் உயிர்கள் தந்தனர்

அலைதாவும் கடலிலே விலையில்லா உயிரையே
ஆடியே கரைத்த எங்கள் மறவர்களே 2
தலைவனின் வழியிலே தணலென குருதியே
சாற்றினை சொரிந்த எங்கள் புயல்களே 2